இந்தத் துணை நகரத் திட்டம் வளர்ந்து வரும் சென்னை பெருநகரத்தின் நெரிசலைப் பெருமளவிற்குக் குறைப்பதோடு, உலகின் ஒரு முக்கிய தொழில் நகரமாகவும், தகவல் தொழில்நுட்ப நகரமாகவும், வளர்ந்து வரும் சென்னையை நோக்கி, மேலும் தொழில் முதலீட்டாளர்களைத் தொடர்ந்து ஈர்த்திடவும், பொதுமக்களுக்குத் தரமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் பயன்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு.... (குறுக்கீடுகள்) சேகர்பாபு உட்காருகிறீர்களா? சேகர்பாபு உட்காருகிறீர்களா? (குறுக்கீடுகள்) அடுத்த அலுவல்களுக்கு இடைஞ்சல் பண்ணுகிறீர்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். நடவடிக்கை எடுப்பேன், முதலில் உட்காருங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர்.)

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். உட்காருங்கள், மூன்று பேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS